உ

மங்கையர்க்கரசியார்

காஞ்சிபுரம்.

திருவள்ளுவர் செந்தமிழ்ப் பாடசாலை

வெளியீடு ௬.

...சிபுரம்

ஸ்ரீ நிலயம் பிரசில், பதிப்பித்தது.

1946.

உ

சிவமயம்

மங்கையர்க்கரசியார்

இஃது

ஐயங்கார்குளம்

திரு. சி. ரா. சண்முக முதலியார்,

திருமதி. சுந்தரம்மையார்,

இவர்கள் புதல்வியும்

காஞ்சிபுரம் மெய்கண்டார்கழக மாணவியுமான

ஜெயலட்சுமி அம்மையாரின்

சொற்பொழிவின் குறிப்பு

காஞ்சிபுரம் பட்டு சவுளி,

திருவாளர் ஊசி. வே. அருணசல செட்டியார் அவர்களின்,

பொருளுதவியால்,

மெய்கண்டார் கழக ஆசிரியர்,

பொன். குமாரசுவாமி அடிகள் அவர்களால்

காஞ்சிபுரம்

ஸ்ரீ நிலயம் பிரசில் பதிப்பித்தது.

1946.

உ
சிவமயம்



பொன். குமாரசுவாமி அடிகள்,
மெய்கண்டார் கழக ஆசிரியர், : : காஞ்சிபுரம்.

உ
சிவமயம்

மங்கையர்க்கரசியார்

எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்.

அன்பர்களே அடியேன்பேச எடுத்துக் கொண்டது மங்கையர்க்கரசி என்பதாகும்.

இவ்வம்மையார் பிறந்தது சோழநாடு ஒரு நாட்டிற்கிருக்கின்ற பெருமை அந்நாட்டில் வாழ்கின்ற அறிவுடைப் பெருமக்களைப் பொறுத்ததாகும். இதனை,

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லைவாழிய நிலனே".

என்று ஔவையார் கூறுகின்றனர். தள்ளா விளையுளுந் "தக்காருந் தாழ்விலாச் செல்வருஞ் சேர்வது நாடு என்று பெரியோர்

கள் பேசுவதற் கொப்ப அறிவும் அன்பும், அருளும், செல்வமும் நிறைந்த அறிஞரையும் விளைவையும் வாய்க்கப் பெற்று ஆடுங்கடை மணி நாவசையாமல் அகிலமெங்கும் நீடுங் குடையைத்தரித்த பிரான் என்று தெய்வக் கவிப் புலவரால்பேச நீதிவழுவாநெறியில் குலோத்துங்கன், அபயகுலசேகரன் அநபாயன் முதலிய சோழ மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டது இச்சோழநாடு. இவ்வம்மையாரின் முன்னோர்கள், ஒரு புறாவிற்காக உடம்பையறுத்துக் கொடுத்த உத்தமர்கள்’’ அபுத்தி பூர்வமாக நேர்ந்த பசுக்கன்றின் கொலைக்குத் தமது ஒருமகனைத் தேர்ச்சக்கரத்திற் கிடத்தி ஊர்ந்த நடு நிலையினர்கள் பொல்லாப் பிள்ளையார் துணைகொண்ட நம்பியாண்டார் நம்பிகளைக்கொண்டு தேவார திருமுறையை உலகிற் குதவிய உத்தமர்கள் சேக்கிழார் சுவாமிகளைக்கொண்டு பன்னிரண்டாந் திருமுறையைப் பாடித்தரச்செய்த பாக்கிய சீலர்கள் வசையில் புகழ் வயங்கு வெண்மீன் திசைதிரிந்துதெற்கேகினும் தற்பாடியதளியுணவிற் புட்டேம்பப் புயல் மாறிவான் பொய்ப்பினும்தான் பொய்யா மலைத்தலைய கடற்காவிரியெனப் பட்டினப்

பாலை பகர்வதற்கிணங்க-முப்போகந்தப்பாமல் வயல்கள் விளைந்து சோழவள நாடு சோறு டைத்தென்றும் தண்ணீருங்காவிரியே தார் வேந்தன் சோழனே மண்ணுறுவதுஞ் சோழ மண்டலமே என்றும் புலவர்கள் புகழுங் காவிரி நதியையும் நாட்டையும் உடையவர்கள் இந்திரன் பூசித்திருந்த தியாகராசப்பெருமான் இவ்வம்மையார் முன்னோர்களிடம் தம்மை வாங்கிக்கொண்டுபோய் திருவாரூரில் வைத்து பூசிக்கச்சொல்லி பூசித்தனரென்றால், அம்மை யாரது நாடு, நகர், நதி. வளம் முதலிய பேசவும் வேண்டுமோ. மேலும் அம்மையாரது தந்தை வழியினர் செய்யும் சிவபூசைக்கு வந்து இறை வன் தமது திரு நடனச்சிலம்பொலியைக் கேட்பித்தன ரெனின் அவர்களது சிவபக்திக் கெல்லையுண்டோ? கூறுமின்.

இறைவன் திருவருள் நிறைந்த உயிர்ப் பகுதியாகிய சிவமுயன்றடையும் தெய்வக் கலைகள் பலவுங் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கத்திருந்த ஓதிப்பனை யோட்டி லெழுதி சரஸ்வதிமால் என்று பெரியகட்டடம் புதுக்கி அதில் வைத்துப் பாதுகாத்து வந்தன ரென்

றல் அவர்களது தமிழ்ப்பற்றும் சமயப் பற்றும், போற்றற்குரியதன்றோ.

கற்பனவை கற்றபின் நிற்க அதற்குத்தக வாலறிவன் நற்றாள் தொழுதலே கற்றதனாலாயபயனென வெண்ணி அறநெறி நின்று புண்ணியர் பூசும் புனிதவெண்ணீறு முதலிய சைவ பூடணமணிந்து சைவ சமயமே சமயம் என்றும் சாவிபோம் மற்றைச் சமயங்களென்றும் சவைமாஞ் சமயஞ்சாரும் ஊழ்பெறலரிதென்றும் சைவமெய்ப்பொருளின் சார்பே பொருளெனச் சார்ந்தும், கண்ணுதலை முப்பொழுதும் வந்துபணிந்தும், பலசிவாலயங்களைப் புதுக்கியும், தம்முயிர்போல் பிறவுயிர்களைப் பேணும் அவர்களது அன்பின்திறம் ஆதிசேடனும் அளவிட்டறிய முடியாதல்லவா. இவ்வம்மையாரும் மனத்தூயார்க்கு எச்சம் நன்றாகும் தக்கார் தகவிலரென்பதவரவர் எச்சத்தாற் காணப்படும். என்ற செந்நாப்போதார் செம்மொழிக் கெடுத்துக் காட்டாக இறைவன் பாலன்புடையராய்க் கருவாய்க் கிடந்துன்கழலே நினையுங் கருத்துடையேன் உருவாய்த் தெரிந்துன்றன் நாமம்பயின்றேன்

பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாங் காதல் சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் என்ற பெரியோர்கள் வாக்கிற் கிலக்கியமாக வும் விளங்கினர். இளம் பருவத்தில் மணல் வீடுகட்டிச் சிறுசோறட்டு விளையாடும் பருவத் திலேயே முன்பு செய் தவத்தின் ஈட்டமும் ஒருமைக்கட்டான் கற்ற கல்வி ஒருவற்கெழு மையு மேமாப்புடைத்து என்பதற் கிணங்க வும் இளம்பிறைக்குக் கலைவளர்வது போல உடல் வளரக் கல்வியுங் கற்பும் கருணையும் ஒழு க்கமும் அன்பும் அறிவும் அருளும் ஆற்றலும் அம்மையார்க்கு உடன் வளர்வதாயின. பரு வம் நாலிரண்டாக மேற்கடிமணப்பருவம் வரு வதால் பெற்றோர்கள் திருமணத்தை நாடியிருந் தனர். மங்கையர்க்கரசியார் இவ்வண்ணம் வளரு நாள்,

உமாதேவியார் தடாதகைப் பிராட்டியாக வும் இறைவன் சோமசுந்தர பாண்டியனுகவும், முருகவேள்உக்கிரகுமா ரபாண்டியனுகவும்முடி புனைந்தரசியற்றிப் பொய்யடிமை யில்லாத புல வர்கள் நாற்பத்தெண்மருடன் கவில் தொறும் நயமுடையதாய் ஆயுந்தொறும் இன்பம் பயப்

பதாகி ஆராய்ந்த தெய்வத்திருநெறிச் செந்தமிழி
ற்கு அகப்பொருளிலக்கணஞ்செய்து கொடுத்
தும் சங்கத்தார் கலகந்தீர்த்தும் பிள்ளைத்தமி
ழை மீனாட்சியம்மையார் இளம்பருவப் பெண்
ணாகிப் பாண்டியர் மடிமீதிருந்து கேட்டுப் பரி
சளித்ததுமான பைந்தமிழைக்கழகம் வைத்
துப் பாண்டியர்கள் வளர்த்து வந்த தமிழ்
நாட்டில் இறைவன் அன்பர்கள்பால் பல திரு
விளையாடல் புரிந்ததும், அமுதை யொத்த தண்
ணீர் பாய்ந்து முப்போகந் தப்பாமல் விளையும்
வைகை நதியையும் பொருநை நதியையும்,
வாடையால் கொன்றைகமழும் தென்றலால்
சந்தனமணங்கமழும் நேரி வெற்பையும்
பொதிகை மலையை வடக்கிலுந் தெற்கிலும்
அரணாகவுடையதும் ஸ்ரீராமபெருமான் முதலி
யோர் பூசித்த இராமேச்சுரம் சேது முதலிய
புண்ணிய சிவதலங்கள் பல அமையப்பெற்ற
துமான பாண்டிநாட்டின் தலைநகராகிய மதுரை
மா நகரில் நீதி வழுவாது (வேலன்று வெற்றி
தருவது மன்னவன் கோலதூஉங்கோடா
தெனின்) என்றபடி கோல்கோடாது (இயல்
புளிக்கோலோச்சு மன்னவனாட்ட பெயலும்
விளையுளுந்தொக்கு-என்னும் முதற்பாவலர்

தம்மொழி சிதைவின்றி வெள்ளமும் பறவை யும் விலங்கும் வேசியருள்ளமும் ஒருவழியோட நெறிநின்று, கதவை இடித்த காரணங் கொண்டு கையை வெட்டிப் பொற்கை வளரப் பெற்றும், இலக்கிய இலக்கண எல்லை கண்டு செந்தமிழிற் சில நூல்செய்துதவியும் புலவர் களின் பாடலிலுள்ள குற்றங்கண்டு குட்டு தற்கோ பிள்ளைப் பாண்டியனிங்கில்லை என்ற படி குட்டித்திருத்தியும், செந்தமிழை உயிர் போல் வளர்த்துவரும் பாண்டியரில் கூன் பாண்டியருக்கு மங்கையர்க்கரசியாரை விதிப் படி மணஞ்செய்து கொடுத்தார்கள்.

அன்பர்களே பிறந்த குலத்திற்குப் பீட ளித்த அம்மையார் புகுந்த குலத்திற்கும் கண வன் கருத்தறிந்து நடந்து கற்பும் பொற்பும், புகழுந்திகழ, காக்கையின் கண்ணிரண்டிற் கும் மணியொன்றேபோல் தனக்குந் தந்தலை வனுக்கும் இரண்டுடம்பிற்கும் ஒருயிர்போல் பிரிவின்றி ஒன்றிவாழ்ந்தார்கள். (கல்வியிற் பிரியவரினும்)

ஒருவ நுங்களை லேபிரிந்தா லோர் மயிலையென்பு
உருவ டுத்தினர் போலோதி வாரும் வருந்தமிழைக்
கோருபி ரித்தறி கோமான் குலோத்துங்கன் கோழிவெற்பில்
திருவ டக்கோடி யாவிசென் றலுந் திருப்புகைக்கே.

(ஒட்டக்கூத்தர்)

என்னைவிட்டுப் பிரிந்து படிப்பதற்குச் சென்றால் திருஞானசம்பந்தர் போற்படித்து வருவதானால் என்னைப் பிரிந்து போகலாம். ஏனெனின் தங்கள் பிரிவால் யான் செத்துச் சாம்பலும் என்புமாவேன். அவர் மயிலையில் பூம்பாவையை எழுப்பியது போல நீங்களும் எழுப்பிக்கொள்ளலாம். (செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின் வல்வரவு வாழ்வார்க் குரை) என்பார். இப்படிப் பிரிவின்றி அணங்கனையாரிதயமும் தம் அருட்கொழுநரிதயமும் ஒன்றாக வாழ்ந்து வந்தார்கள். இல்வாழ்க்கையில் அன்பும் அருளுந்தாங்கி இன்சொலின் விருந்து புரந்தந்து அருந்தவரெவரையும் பேணி ஐவகை வேள்வியும் ஓம்பி நல்லறம் நிரப்பிப் பல்புகழ் நிறீஇ வேட்டகமும் பெருமைப்பட வாழ்ந்து வருவார்கள் வரும் நாள்.

மையுள பகுவாய் நாகப் பள்ளியோ னாதி வானோர்
கையுள வலியா லட்ட கடலமு தனைத்து மாரப்
பொய்யுள மகலக் கற்ற புனிதநூற் புலவர் நாவில் [டும்.
செய்யுளின் விளைவித் தூட்டத் திருச்செவி தெவிட்டவுண்

(திருவிளையாடல்.)

திருமாலாதி தேவர்கள் கடல் கடைந்த அமிழ்தினுமினிய பொய்யில் புலவர்கள் செந்தமிழ்க் கடலில் தங்கள் நாவாகிய மத்தால் கடைந்து கண்ட செந்தமிழ்ச் செய்யுளமிர்தத்தைத் தந் திருச் செவியிலூட்டவுண்டு பொழுது போக்குவார்கள். ஆக்கைக்கேயிரை தேடியலமந்து காக்கைக்கே யிரையாகிக் கழியாமல் பூக்கைக்கொண்டு அரன் பொன்னடி போற்றுவதும், நாக்கைக்கொண்டு அரன் நாமம் நவிற்றுவதும் மாலறநேயம் மலிந்தவரது சிவவேடங் கண்டபோதே பானலங் கண்கள் நீர்மல்கப் பணிந்து இறைவனாகவே யெண்ணி நம் வினைத்துயர் தீர்த்திட வெடுத்த வடிவன்றோ அவனடியார் வேடமென்று அவ்வடியவர்களை வழிபட்டு வேண்டிய உதவி செய்வதும் ஆக வருவார். ஆலயந்தொழுவது சாலவும் நன்றென்று சிறிய குழந்தைகளுக்கும் விளங்கவுரைத்த தவமூதாட்டி ஔவையெம்

அன்னையின் அமுதமொழியைப் பேணிமுப்போதுந் தப்பாமல் தங்கள் குல தெய்வமாகிய மீனாட்சி சோமசுந்தரப் பெருமானை வழிபட்டு வாழ்ந்து வருவார்கள். வருநாள்.

(ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினுந்தான் முந்துறும்) என்ற முதற் பாவலர் மொழிக்கிணங்கத் தீவினை வலத்தால் பாண்டியன் சமண சமயம் புகுந்து அச்சமய குருமார்கள் வயமானான். முன்னவன் அருளைப் பெற்று மும்மையுந் துறந்தாரேனும் மன்னவன் சென்றவாறே செல்வது வழக்காறன்றோ? மன்னன் எப்படி மன்னுயிரப்படி குடிகளுஞ் சக்கரநெறிநின்று சமணரானார்கள்.

இகழி னிகழ்ந்தாங் கிறைமக னென்று
புகழினு மொக்கப் புகழ்ப—இகன்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யும்
நீர்வழிப் பட்ட புணை (நீதிநெறி விளக்கம்.)

போதவிழ் தாரான் நக்கர் புன்னெறி யொழுக்கம் பூண்டோன்
ஆதலிற் கன்னிநாடும் அமணிருள் மூழ்கிப் பூதி
சாதன நெறியாஞ் சைவ சமயமும் முத்திச் செல்வ
மாதவ நெறியுந் துன்ற மறைந்தது வேத நீதி (திருவிளையாடல்)

வேப்பமாலை யணிந்த பாண்டியன் தீய வொழுக்கம் பூண்டதால் பாண்டிய நாடு சமணிருளில் மூழ்கியது. சிவ சம்பந்தமான சைவ சமய நெறியகன்றது. இதை அறிந்த பாண்டி மாதேவியார் வெயிலில் வருந்தும் புழுப்போல் துடித்து மறைபரவுஞ் சைவத் தவநெறியல்லாத பவநெறியில் நாயகன் ஆழ்ந்தனரோ என்று அளியராய்த்தளர்வார். அம்மையார்தம் உயிர்போன்ற சைவ சமயம் மறைந்தது. புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயந் தத்தம் மதங்களிற்றட்டுளுப்புப் பட்டுநிற்குஞ் சமண சமயமானது நாடுநகர் முழுதும் பரவியது. நீறில்லா நெற்றிபாழானர்கள் வெண்ணீறணிகிலாதவரைக் கண்டாலம்ம நாமஞ்சுமாறே என்றபடி அம்மையாரச்சமடைந்தனர். இனிமேல் நம் நாயகனும் நாட்டினரும் எந்தக் காலம் மங்கலமாகிய சைவபூடண சிவவேடம் பூண்டொழுகுவரோ என்றலமருவார். சிவனடியார் தமைக்காணப் பெறுமலின்றென் கண் மாசு படுவதெனத் தலையன்பாற் கவலை கூர்வார்.

இந்நெறி யொழுகு கின்றார் ஏழுல குய்ய வந்த
மன்னிய புகலி வேந்தர் வைதிக வாய்மை சைவச்

செந்நெறி விளக்கு கின்றார் திருமறைக் காடு சேர்ந்த
நன்னிலை கன்னி நாட்டு நல்வினைப் பயந்தாற் கேட்டார்.

அன்பர்களே, மங்கையர்க்கரசியார் இவ்வாறு வருந்துங் காலத்துச் சமண சமயக்களையைக் களைந்து சைவ சமயப்பயிர் தழைக்க அம்பிகையின் திருமுலைப்பாலுண்டு அரிய தமிழ்மறைப் பதிகம்பாடித் தெய்வத் திருநெறியைப் பரப்பி வரும் திருஞானசம்பந்த சுவாமிகள் திருமறைக்காட்டில் எழுந்தருளிய செயலைத் தாங்கள் நாடு செய்த நற்றவப் பயனால் கேள்விப் பட்டார். கேட்டபோதே கண்களில் நீர் மல்க நாத்தழுதழுக்க மயிர்க்கூச் செறிய மார்பிற் பால் பெருக நின்றனர். இத்தலையன்மை

சுரந்த திருமுலைக்கே துய்யதிரு ஞானம்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்—சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்த வாறு

இலைபடர்ந்த பொய்கை இடத்தழுதல் கண்டு
முலைசுரந்த வன்னையோ முன்னின்—நிலைவிளம்பக்
கொங்கை சுரந்தஅருட் கோமகளோ சம்பந்தா
இங்குயர்ந்தாள் யார்சொல் எனக்கு.

எனப்பல பெருமக்கள் புகழ்ந்து பேசியுள்ளார்கள். பின்பு அம்மையார்

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு
கருவியுங் காலமுஞ் செய்கையும் செய்யும்
அருவினையு மாண்ட தமைச்சு
வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.

என்றபடி கருவிகளை அமைத்துக் காலம் ஓர்ந்து செயல்வகை தேர்ந்து அருவினை வாய்ந்து கற்றுயர்ந்த ஒட்பமும் கருமம் ஆற்றுந் திட்பமும் குடிகளைக் காத்தலிலும் ஆள்வினையமைவிலும் மனத்திட்ப முடையவராய்த் தமது பேரவையில் சிறந்து விளங்கும் குலச்சிறையாராகிய அமைச்சரைக் கொண்டு அம்மையார் திருஞானசம்பந்தப் பெருந்தகையாருக்குத் திருமுகமெழுதி வர விடுத்தார்.

வெங்குரு வேந்தர் அடிபணிந்தடியேன் குலச்சிறை
[விளம்பு விண்ணப்பம்.
இங்கெழுந் தருளிச் சமணிரு ளோதுக்கி எம்மிறை மகத்துநீ
[றளித்துப்

பொங்கிருட் பகைஞனுந் தென்றமிழ் நாட்டைப் புகுதா
[தனைவழி நிறுத்தி
எங்களைக் காக்க என்றபா தாங்கேட் டெழுந்தனர்
[கவுணியர்க் கிறைவர்

இதை அறிந்த சிவஞானச் செல்வராகிய நம் பரமாசாரியர் முத்துச் சிவிகையிலேறி 'பரசமய கோளரிவந்தார்; பாலறாவாயர் வந்தார்' என்று திருச்சின்னம் முழங்க அடியவருடன் பல சிவதலங்களிற் பரவி வழிபட்டுச் செந்தமிழ்ப் பதிகம் பாடிக்கொண்டு புறச்சமயத்தவர்கட்கு எல்லாத் துர்நிமித்தங்களும் தீய சொப்பனங்களுங் காண அம்மையாருக்கும் அமைச்சருக்கும் நன்னிமித்தங்களும் நற்கனவுகளுங் காண எழுந்தருளினார். நாயனார் வரவை வந்து உணர்த்தின மக்களுக்கெல்லாம் ஆடை அணிகலனுதவி அமைச்சரை வரவேற்க அனுப்பினார்கள். குலச்சிறையார் ஞானப்பாலுண்ட நஞ்சமய குரவரைக் கண் செய்த பாக்கியமாகக் கண்டனர். கண்டபோதே பார்மேல் பனைபோல் விழுந்து பணிந்து மயிர்க்கூச் செறிந்து கண்ணீர் மல்க நிலத்திருந்தெழாமை கண்டு புகலி வேந்தர் இளங்கதிர் வீசும்முத்துச் சிவிகையை விட்டிறங்கி அம்பிகையளித்த

அழகுமுண்ட அழகிய அம்புய மலர்க்கரத்தால் எடுத்துப் பகர்வார்.

செம்பியர் பெருமான் திருமக ளார்க்குந் திருந்திய
சிந்தையீ ருமக்கும்
நம்பெரு மான்றன் திருவருள் பெருகும் நன்மைதான்
வாலிதே யென்ன
வம்பல ரலங்கல் மந்திரி யாரும் மண்மிசைத்
தாழ்ந்தடி வணங்கித்
தம்பெருந் தவத்தின் பயனனை யார்க்குத்
தன்மையாம் நிலையுரைக் கின்றர்.

அருளாசிரியர் அமைச்சரை எடுத்துத் திருமகளனைய மானியார்க்கும் திருந்திய கருத்துடைய உமக்கும் இறைவன் திருவருள் வன்மை நலமேயோ வென்னக் குலச்சிறையார்,

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும் இனிஎதிர்
காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனுல் எற்றைக்குந்
திருவரு ளுடையோம்
நன்றியில் நெறியி லழுந்திய நாடும் நற்றமிழ்
வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றெளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தன மென்பார்.

பின்னர் அடியவரும் அமைச்சரும் ஆலவாயைக் காண்பிக்க ஆலயத்தை அடைந்து ஸ்ரீ மீனாட்சி சோமசுந்தரப் பெருமானைச் செந்தமிழ்ப் பதிகத்தால் பாடினர்.

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக்
கைமட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து
நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால் வேதமும்
பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவா
யாவது மிதுவே.

மலர்மகள்போல்வாராய மங்கையர்க்கரசியாரும் பெருமானை வழிபட ஆலயத்திற் சென்று ஒருமருங்கில் ஒதுங்கும் மானியாரை ஆளுடைய பிள்ளையாருக்கு அமைச்சர் வளவர்கோன் பாவையாரெனக்காட்டத் தென்னவன் தேவியார் திருஞானசம்பந்தராகிய செழுஞ்சுடர்வீசும் இளங்கதிரைக் கண்டார்கள். கண்டவுடன் கருங்குழற் கற்றைமேற் கை குவித்து நீலமலரனைய கண்கள் நீர்மல்கப் பவளவாய் குழறி யானும் என்பதியுஞ் செய்ததவம் என்

கோலோ வென்று முன்னங் கேட்டபோதே பால் சுரந்த கொங்கைகள் கண்டபோது வெள்ளம் பெருகத் தலையன்புடைய அம்மையாரை அச்சமும் அன்பும் ஈர்த்தெழ அடியிணையில் அடியற்றபனைபோல் வீழ்ந்து வணங்கப் பிள்ளையார் தங்கர மலரால் எடுக்க எழுந்த அம்மையார்க்குத்

தோன்ற வகைகரந்தும் தோன்றலைக்கண் டுண்ணெகிழ்ந்து
தோன்ற நின்றன் முன்புதனள் சோமேசா-தோன்றுகின்ற
அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

என்றபடி அம்மையார் அன்புபெருக நின்றனர். மானியார் கருத்து முற்றியதென்று பிள்ளையார் அம்மையாரை அரண்மனைக் கனுப்பி அமைச்சர் காட்டிய திருமடத்தில் அடியவர்களுடன் தங்கியிருந்தனர். இவ் விளைவை நேரே அறிந்த சமண ஆசிரியர்கள் பலர் பருவரலுடன் அரசவை சென்று மன்னர்மன்னு! சிவனருள் பெற்றவொரு இளஞ் சிறுவ சைவ வேதியன் எங்களை வாதில் வெல்ல வந்திருக்கின்றான் அவ்வேடத்தைக் கண்ட யாங்கள் கண்டு முட்டென்றனர். நீங்கள்

சொல்லக்கேட்ட யானுங்கேட்டுமுட்டென்றனன். பின்னரக்கொடியோர் சிவவேடம் பூண்ட சைவ வேதியராகிய திருஞானசம்பந்தர் அடியார்களுடன் தங்கிய திருமடத்தில் வெந்தமுற்பட மந்திரத் தீத்தொழில் விளைத்து ஊரை விட்டுப் போக்குவோமென்றனர். மன்னனும் அவ்வாறு விரைந்து செய்து போக்குங்கள் என்று ஏவினன்; மலரமளி மேவினன். தளிரடிமென் மயிற் சாயலம்மையார் பள்ளியிற் செல்ல அரசன் முகமலர்ச்சியின்றி உரையாடாதிருக்க 'என் உயிர்க்குயிராயுள்ள இறைவ தாங்கள் முகம் புலர்ந்து மகிழ்ச்சியு மாற்றமுமின்றி இருப்பதென்னே' என்று வருந்த,

தேவியார் தம்மை நோக்கித் தென்னவன் கூறுகின்றன்
காவிநீள் கண்ணினுய்கேள் காவிரி நாட்டின் மன்னும்
தாவில்சீர்க் கழும லத்தான் சங்கா னருள்பெற் றிந்து
மேவினன் அடிகள் மாரை வாதினில் வெல்ல வென்று.

வெவ்பொடி பூசுந் தொண்டர் விரவின ரவரை யெல்லாங்
கண்டுமுட் டடிகள் மார்கள் கேட்டுமுட் டியானுங் காதல்
வண்டுணத் துதைந்த கோதை மானியே யிந்த வந்த
பண்புமற் றிதுவே யாதும் பரிகவே றில்லை யென்றன்.

அரசன் அம்மையை நோக்கி இறைவனருள் பெற்ற கழுமலத்து ஆளுடைய பிள்ளை விபூதி பூசிய தொண்டர்களோடு நம் அடிகண்மாரை வாதில் வெல்ல வந்திருக்கின்றான். அடிகண்மார் கண்டு முட்டானார்கள். யானுங்கேட்டு முட்டானேன் என்றான். மன்னவன் சொன்ன மறுமொழியை மானியார் கேட்டு தெய்வத் தன்மையால் அவர்கள் வாதுசெய்தால் நாம் வென்றவர் பக்கஞ் சேர்வதுவே உறுதியாகும் இதற்கேன் வருந்தவேண்டு மென்று தேற்றினார்கள். அன்றிரவு வஞ்சர்கள் மந்திரத்தழலை மடத்திற்கேவினார்கள். ஆதிமந்திரம் அஞ்செழுத் தோதுவார் மேவும் மாதிரத்தினும் மற்ற மந்திரவிதி வருமோ? மந்திரத்தழல் பயனற்றொழிய நெருப்பை வைத்துவிட்டார்கள். மடாலயந் தீப் பிடித்தெரிவதை அடியவர்களால் அறிந்த ஆளுடைய பிள்ளையார் வெய்ய இத் தீங்குக்குக் காரணம் அரசனே யாதலால்,

செய்யனே திருவாலவாய் மேவிய
ஐயனே யஞ்சலேன்றருள் செய்யெனைப்
பொய்யராம் அமணர்கொளுவுஞ் சுடர்
பையவே சென்று பாண்டியர்க் காகவே.

இப்பதிகத்தில் நெருப்பைப் பையவே பாண்டியன் பாற் செல்லும்படி ஏவினர். அவ னுடலிற் சுரநோயாகப் பற்றினது. இதனை நம் தெய்வச் சேக்கிழார்.

பாண்டிமா தேவியார் தமதுபொற்பில் பயிலுநெடு
    மங்கலநாண் பாதுகாத்தும்
ஆண்டகையார் குலச்சிறையா ரன்பினாலும் அரசன்பா
    லபாராத முறுதலாலும்
மீண்டுசிவ நெறியடையும் விதியினாலும் வெண்ணீறு
    வெப்பகலப் புகலிவேந்தர்
தீண்டியிடப் பேறுடைய னாதலாலும் தீப்பிணியைப்
    பையவே செல்கவென்றார்.

அன்பர்களே நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும். இத்தழலை வெகுண்டு விரைந்து செல்க வென் பாரானல் தப்பாது பாண்டியன் அப்போதே வெந்து நீராவான் அம்மையார் அமங்கலமாகா மலும் குலச்சிறையார் அன்பிற்கும் அரசனது குற்றங்கருதியும் மீண்டுந் தீண்டித் திருநீறு தரிக்கும் பேறுடையானாதலாலும் தீப்பிணி யைப் பையச்செல்க வென்றருள் செய்தார் அத்தீப்பிணி அரசனுடலில் சுரநோயாக

வருந்த இதனை அறிந்த அம்மையாரும் அமைச்சனாரும் ஆளுடைய பிள்ளையாருக்குத் தீங்குறில் உயிர்விட நிச்சயித்திருந்தனர். தன்னுடலிற் றீப்பிணி வருத்தந் தாங்காது மன்னன் மலராமளிகருக வருந்தினன். அம்மையார் அருந்துய ரெய்தி வஞ்சகரிட்டதீயேயாகும் இதுவென வருந்தினார். சமணர்களோ தங்கள் மருத்துவ நூலில் வகுத்த சிகிச்சைபலவுஞ் செய்து அருகனே அருகனே காவாயென்றனர். அவர்கள் மயிற்பீலியால் மந்திரஞ்சொல்லித்தடவுந்தோறும் அவிசொரிந்த அனல்போல் நோய்மிகுத்தது. பாண்டிமா தேவியார் பயமெய்தி இப்பாதகர் அடியார் திருமடத்திலிட்ட தீயாகும் இந்நோய் இதனை இவர்கள் தீர்க்கப்புகின் மிகுமேயன்றி குறைவுறுதென்று அமளியிலிருந்து அடிவயிற்றைப் பிசைந்து என்செய்வேனென ஏங்கி அரசரைத் தழீஇ அமைச்சர்போலிருந்து கணவருள்ளங் கனியக் கட்டுரை கூறி ஆளுடைய பிள்ளையார் வந்தால்தான் இவ்வெப்புநோய் நீங்குமென்றனர். உடனே அரசன் அனுமதி பெற்று அமைச்சருடன் சென்று பிள்ளையாரைக் கண்டனர்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பப் கண்டார்கள்

அம்மையாரும் அமைச்சரும் ஆளுடைய பிள்ளையாரைக் கண்டு அடியிணையில் வீழ்ந்து வருந்திக் கவலைக்கடற்கோர் கரைகாணாராய்த் தேம்பித் துயருற்றனர். பிள்ளையார் தமது துணைக்கரங்களால் எடுத்து உங்கள் பால் தீங்குளவோ வென்றார். அரசன் பாலெய்திய விடம்போன்ற வெப்புநோயை நீக்கி வஞ்சகரை வென்று அடியேங்களையாதரிக்க வேண்டுமென்றனர். உடனே விரைந்து ஞானபோனகர் சிவிகையிலமர்ந்து ஆலயமடைந்து ஆலவாயண்ணல்திருமுன் நின்று

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
ஞாலநின்புக ழேமிக வேண்டுந்தேன்
ஆல வாயி லுறையுமெம் மாதியே

இத்தமிழ் மறையால் வேண்டி அண்ண லருள் பெற்று அரசவை யடைந்தார் மன்னன் அப்பச்சிளங் குழவியாகிய பாலறுவாயரைக் கண்டவுடன் இச்சையொடு மிருகரங்களையும் உச்சிமேல் கூப்பினன் நோய்சிறிது நீங்கியது தன் தலைப்பக்கத்து ஆதனத்தைக் காட்டி அன்புடன் இருக்கும் படிவேண்டினன் நஞ்ச மயகுரவர் இருந்தபின் உலகாள்வோன் இருக்குமூர் வினவ நாமிருக்குமூர்கழுமல மென்பதைக்கழறினர். கதிரவனைச்சூழ்ந்த கருமுகில்போல் ஆரவாரத்தினராய் அமணர் பலர் அருகேசூழ்ந்திட அம்மையார் உளம் நடுங்கிப்பால்மணங்கமழும் பச்சிளங்குழ விக்குப்பாதக முருடரால் என்னதீங்குவரு மோ வென்று பதைத்து நடுங்கினர். இதை ஞானப்பாலுண்டு நறு மணங்கமழும் ஞான சம்பந்தர் தெரிந்து

மானின்நேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவ னென்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு வாலவாயரன் நிற்கவே

இவ்வற்புதத் தெய்வத்திருநெறித் தமிழாற் பதிலளித்தனர். மானியாரும் மந்திரியும் மன்னனுங்கேட்டு மகிழ்வெய்தினர். பின்னர் சமணரொருபக்கமும் பிள்ளையார் ஒருபக்கமும் நோய்தீர்க்கும்படி ஏற்படுத்த நம்பிள்ளையார் பெருமானைவேண்டி

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே

என்ற இத்திருப்பதிகம் பாடித் திருநீறணிந்து அரசனது வலப்புற வெப்புநோயைப் போக்கியருளினார். மற்ற இடப்புறத்தில் வஞ்சகர்கள் மயிர்ப்பீலி கொண்டு தடவியும் நோய் நெய்விட்ட நெருப்புப்போல மிக்குவருத்த அரசன் அப்பதிதரைச்சீறி அகலுமின் என்று பிள்ளையாரையே இடப்புறத்தினும் நோய்தீர்த்தருளவேண்டினன் இடப்புறத்தினும் புனித வெண்ணீற்றைப். பூசி நோயைப்போக்கியருளினார். மீண்டும் அப்புன்சமயவாதிகள் தங்கள்மந்திரம் எழுதிய ஏட்டையும் சுவாமிகள் திருப்பதிகம் எழுதிய ஏட்டையும் நெருப்

பிலும் நீரிலும் விடுவது வேகாமலும் எதிர் ஏறிச் செல்லுவதாலும் வெற்றி தோல்வி யறிவது எங்கள் பக்கந்தோல்வியுற்றால் தாங் களே கழுவேறி உயிர் விடுவோமெனச் சூளு ரைகூறி நெருப்பிலும் நீரிலும் விட்டுத் தோல் வியடைந்தனர். நமது பிள்ளையார் இறைவனை வேண்டித் திருமுறையில் திருக்கயிறு சாத்தி திருநள்ளாற்றுத் திருப்பதிகம் உதயமாகப் போகமார்த்த பூண்முலையாளென்னும் அப் பதிகத்தை நெருப்பிலிட வெந்து கரியாகாமல் எரியாரழல்வீழ்ந்தெழுந்து கரியாய் மொழிந் தது. ஆற்று வெள்ளத்திலிட்ட வாழ்க அந்தண ரென்னுந் திருப்பாசுரமும் கழுவின் காடேறப் புக்க அருகர் ஏடேறப்பால் குறைந்த தென்ற முச்செய்து சைவசமயமே உண்மைச்சமய மென்றுணர்த்தி எதிரேறி வென்றது. கண்ட சமணர் அச்சமெய்தினர்கள். அரசன் நீறணிந் தான். நகர மக்கள்யாவரும் நீறணிந்தார்கள் வித்தகத்திருவேடமாயின மீனவன் திரு நாடெலாம். பாண்டிநாடு யாவும் திரு நெறி நடந்தது. அன்பர்களே மங்கையர்க்கரசியார் மொழியைக் கேட்டுப் பாண்டியன் நோய்தீர்ந் ததை

அற்கா அமணர்மொழிகேட் டல்லலுற்றன் மாறனில்லாள்
சொற்கேட்டு நோய்தீர்ந்தான் சோமேசா—நற்காக்கு
நல்லினத்தின் ஊங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்ப தூஉம் இல்.

என்றனர் சிவஞான முனிவர் அன்பர்களே சமணர் சார்பை நீங்கிச் சிவஞானச்செல்வராகிய திருஞானசம்பந்தர் திருவடியை யடைந்து அரசர் வெப்புநோயுடன் கூனும் நீங்கிப் பிறவி நோயும் ஒழிந்து அம்மையாருடன் இன்றுங் கயிலையில் நின்றசீர் நெடுமாற நாயனாராக யாவரும் வணங்க வீற்றிருக்கின்றனர். பீடு பேறநில் தோன்றிற்புகழொடு தோன்றுக என்னும் மூதறிஞர் மொழிக்கிணங்கப் பிறந்த குலத்திற்கும் புகுந்த குலத்திற்கும் பெண்களுலகிற்கும் பெருமை யளித்துப்புக ழெய்திய மங்கையர்க்கரசியார் ஒழுகிய சிவநெறியை அவரடித்துணைகொண்டு நடந்து என்போன்ற பெண்ணுலகம் பெருமையடைய வற்புறுத்தி அடியேன் சொற்பொழிவைமுடித்துக் கொள்ளுகின்றேன் குற்றம் பொறுத்து ஆசிகூறப் புனிதர் பேரவையை வேண்டுகின்றேன் சுபம்.

பெரிய புராணம்

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம் வளவர்திருக்
குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள் தென்னர்குலப்
பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளினாலே இருந்தமிழ்நா
டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளி வெண் திருநீறு பரப்பி னாரைப்போற்றுவார்
கழலெம்மால் போற்ற லாமே

பூசுரர்சூ ளாமணியாம் புகலிவேந்தர் போனகஞா
னம்பொழிந்த புனித வாக்கால்
தேசுடைய பாடல்பெறுந் தவத்தினாரைச் செப்புவதியா
மென்னறிந்து தென்னர் கோமான்
மாசில்புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ
வழித்துணையாய் நெடுங்காலம் மன்னிப் பின்னை
ஆசில்நெறி யவரோடுங் கூடஈச ரடிநிழற்கீ
ழமர்ந்திருக்க அருளும் பெற்றார்

முற்றிற்று

சுபம் சுபம் சுபம்

இந்நூலை அச்சிடப்
பொருளுதவிய திருவாளர்
காஞ்சிபுரம் பட்டு சவுளி வியாபாரம்,
ஸ்ரீ. வெ. அருணாசல செட்டியார் அவர்களுக்கு

வாழ்த்துரை

கலிவிருத்தம்.

மாசின் மங்கைய ருக்கர சம்மைசிர்
தேசின் அச்சிடச் செம்பொரு ளீந்தனன்
ஸ்ரீ வெஅரு ணாசல உத்தமன்
வாச வன்என வாழிநீ டூழியே.

உ

சிவமயம்

காஞ்சிபுரம் திருவள்ளுவர் செந்தமிழ்ப் பாடசாலை

விளம்பரம்

அன்பர்களே!

இப்பாடசாலையின் நோக்கம் மாணவர் மாணவிகளுக்குத் தமிழ்க் கல்வியைக் கற்பித்துப் பேரவையில் விரிவுரையாற்றப் பழக்கி அறநெறியில் ஒழுகச்செய்தல். சைவசமயாசாரிய சந்தானாசாரியர்களின் திருவருள் நெறியைப் பரவச்செய்தல். சைவசமயச் சொற்பொழிவுகளின் குறிப்புகளை அச்சிட்டுப் பரவச்செய்தல். அடியிற் குறித்த நூல்களின் மூலத்தை மனப்பாடஞ் செய்து ஒப்புவிப்பவர்கட்குக் கீழ்க் குறித்த தனிப் புத்தகமும் பரிசும் அளித்தல். பாடசாலைக்கு ஓர் இடம் அமைத்தல் முதலியன. சுபம். சுபம். சுபம்.

புத்தகப் பரிசின் விபரம்

ஆத்திசூடி	0	1	0
கொன்றைவேந்தன்	0	1	0
நறுந்தொகை	0	2	0
மூதுரை, நல்வழி இரண்டிற்கும் ...	0	4	0
திருக்குறள்	20	0	0
திலகவதியார் உரை நடை ...	3	0	0
மங்கையர்க்கரசியார் ஷை ...	3	0	0
காரைக்காலம்மையார் ஷை. ...	3	0	0

பொன். குமாரசுவாமி அடிகள்,

மெய்கண்டார் கழக ஆசிரியர், 19-மடத்துத்தெரு, காஞ்சிபுரம்.